

நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக நெல்லை மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் மழை நீர் தேங்கியதை இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்ட இடங்களை சட்டமன்றத் பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் நேற்று (14.12.2024) பார்வையிட்டு ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள். உடன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டசெயலாளர் டி.பி.எம்.மைதீன்கான் நெல்லை மாநகர செயலாளர் சுப்பிரமணியன் உட்பட பலர் உடனிருந்தனர்.



நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக அம்பாசமுத்திரம் வட்டத்தில் சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர்களுக்கு நேற்று (14.12.2024) வழங்கினார்கள். உடன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண்குராலா, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்டச் செயலாளர் டி.பி.எம். மைதீன்கான் உட்பட பலர் உடனிருந்தனர்.



நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் கிரியம்மாள்புரம் கிராமத்தில் வாழை பயிர்கள் சேதமடைந்ததை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (14.12.2024) பார்வையிட்டார்கள். உடன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான் உட்பட பலர் உடனிருந்தனர்.



நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெல்லை மாநகராட்சி வர்த்த மையத்தில் 6 படகுகளுடன் 50 தன்னார்வலர்கள் மீட்புப்பணியில் தயார் நிலையில் உள்ளதை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (14.12.2024) பார்வையிட்டு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள பாராட்டி ஊக்கப்படுத்தினார்கள். உடன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டச் செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான் உட்பட பலர் உடனிருந்தனர்.

## பேருந்து நிலையத்தில் வெள்ள நீரைத் தடுக்க ரூ. 5 கோடி ஒதுக்கீடு!

# நெல்லை மாவட்டத்தில் மீட்புப் பணிகள் தீவிரம்!

### முதல்வரின் உத்தரவையடுத்து - அமைச்சர் கே.என். நேரு நேரில் ஆய்வு செய்து பணிகளை முடுக்கிவிட்டார்!

நெல்லை, டிச.15-

நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது திருநெல்வேலி மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் தேங்கிய மழைநீரை இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்ட இடங்களை தமிழ்நாடு சட்டமன்றத் பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் ஆகியோர் நேற்று (14.12.2024) பார்வையிட்டு ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த பல்வேறு பகுதிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள், இன்று இரண்டாவது நாளாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த துறை சார்ந்த அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீரினால்; பாதிக்கப்பட்டது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நெல்லை மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் நிரந்திரமாக வெள்ளநீரை தடுப்பதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மழைநீர்; கால்வாய் அமைக்கும் பணிகள் தொடங்குவதற்கு அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இனி வரும் காலங்களில் பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் வெள்ளநீர் தேங்காதவாறு பணிகள் நடைபெறும். மேலும் நீர் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு பகுதிகளில் இருந்து 20 ராட்சச மின்மோட்டார்கள் கொண்டு வரப்பட்டு நீர் வெளியேற்றும் பணிகள் ஈடுப்படுத்தப்பட உள்ளது.

முக்கூடல் பாபநாசம் ஆலங்குளம் சாலையிலும் மழை நீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை உடனடியாக சரிசெய்திட தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நெற்பயிர்,வாழை, பிற தானியங்கள் சேதங்கள் குறித்து கணக்கீடு செய்யப்பட்டு கணக்கீடு நிறைவு பெற்ற பின் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு சென்று தேவையான நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**மீட்புப் பணிகள் தீவிரம்!**

தொடர்ந்து வெள்ளநீரில் மக்கள் சிக்கிக்கொண்டால் அவர்களை மீட்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி வர்த்தக மையத்தில் 6 நாட்டு படகு, தண்ணீரை வெளியேற்றும் மோட்டார்களுடன் 50 தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளதை பார்வையிட்டார். சீவலப்பேரி தாமிரபரணி ஆற்றுப்பாலத்தை வெள்ளம் மூழ்கடித்து செல்வதையும், சேவியர் காலனியில் பாதிக்கப்பட்ட இடங்களில் இயந்திரங்கள் மூலம் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பார்வையிட்டு பணிகளை விரைந்து மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் , மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜு, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் உட்பட பலர் உடனிருந்தனர்.

# கிரீன் மேஜிக் பிளஸ் என்ற புதிய வகையான பால் அறிமுகம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.15-

தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் மற்றும் சென்னை மெட்ரோ மூலமாக சுகாதாரமான முறையில் தரம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் சுமார் 200 வகையான பால் உபப்பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேல் பால் விற்பனையில் தமிழகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 2019-2020-ஆம் ஆண்டில் சுமார் 23 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் பால் விற்பனையான நிலையில் தற்போது 2024-2025இல் சுமார் 7 இலட்சம் லிட்டர் அதிகரித்து 30 இலட்சம் லிட்டர் அளவில் விற்பனையை அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் விருப்பத்திற்கு ஏற்ப அவ்வப்பொழுது புது வகையான பால் மற்றும் பால் பொருட்கள் ஆராய்ந்து பொதுமக்களுக்கு ஏற்ற வகையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஆவின் பால் விற்பனை அனைத்து நகர வெளிப்புறப் பகுதிகளை விரிவாக்கம் செய்யும் வகையில் சுமார் 2 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வெளிப்புற பகுதிகளில் சில்லறை விற்பனையாளர்களின் குளிர்சாதன செலவினங்களை கருத்தில் கொண்டும்.

மேலும் தற்பொழுது குழந்தைகள்மற்றும் பொது மக்கள் இடையே வைட்டமின் ஏ மற்றும் டி சத்து குறைபாடு ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளதால் அதற்கு ஏற்றவாறு 4.5 கொழுப்பு சத்து மற்றும் 9 % இதர சத்துக்களுடன் வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்ட கிரீன் மேஜிக் பிளஸ் என்ற புதிய வகையான பால் சில்லறை விற்பனையாளர்களுக்கு சற்று அதிக கமிஷனுடன் சில ஒன்றியங்களில் மட்டும் குறைந்த அளவில் உற்பத்தி செய்து அதனுடைய சந்தையை கண்காணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சில்லறை தட்டுப்பாடு காரணமாக 450 ml ரூபாய் 25 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் அனைத்து வகையான பாலின் விற்பனை அளவையும் குறைக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. போரூரில் கழக கொடியேற்றி இனிப்பு மற்றும் 500 நபர்களுக்கு அறுசுவை உணவை வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் அருணாசலம், பி.எம் செல்வராஜ், க.நடராஜன், பி.பால்ரவி, செ.முரளி, ஸ்டான்லி, இரா.ஏழுமலை, செல்லமுத்து, வி.தினேஷ், ஆர்.டி.பாஸ்கரன், சூர்யபிரகாஷ், எஸ்.காளீஸ்வரி, த.பாலாஜி, ஜெரோம், தனசேகர், த.நரேஷ், மனோகரன், மாறன், ந.கந்தன், ஆர்.கண்ணன், ஆர்.ஆர்.சரவணன், அ.டி.நாகராஜன், மு.மகேஷ், த.சுகுமார், ஆர்.டி பார்த்திபன், சொக்கலிங்கம், ஜெரோம் ஆரியநாதன் கிளாரா, சதீஷ், சஞ்சய், மைதீன், கிறிஸ்லர், குமார், கிருஷ்ணன், சுந்தராஜன், கு.சுரேன், பன்னீர், நரேஷ், காளிதாஸ், பிரபா,லட்சுமி, தியாகு, கே.முனுசாமி, ஜார்ஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முகமது இஸ்மாயிலும் பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வெங்கடேசனும் ஏற்பாடு செய்தனர்.

## ஞான.இமையநாதன் தலைமை!

# மயிலாடுதுறை மத்திய ஒன்றியத்தில் இரத்ததான முகாம்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை, டிச.15–

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இரத்ததான முகாம் திருவிழந்தூரில் நடைபெற்றது.

முகாமிற்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான. இமையநாதன் தலைமை தாங்கி னார். சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வ மணி, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ப.முருகமணி ஆகியோர் முன்னிலை வகித்த னர். ஒன்றிய இளைஞர் அணி எம்.கே. நேதாஜி வரவேற்றார்.

இரத்ததான முகாமை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்து இரத்ததானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பேசினார். மயிலாடுதுறை அரசு மருத்துவ மனை மருத்துவ குழுவினர் 76 பேரிடம் இரத்தத்தை தானமாக பெற்றனர்.

நிகழ்ச்சியில் சீர்காழி ஒன்றியக் கழகச் செயலாளர் பஞ்சுகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள், பி.சிவதாஸ், அ. காந்தி, நத்தம் ஏ.வின்சென்ட், கென்னடி, அரசு வழக்கறிஞர் இராம. சேயோன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர் சௌ.சர்வோதயன், தொ.மு.க. மாநில முன்னாள் பொருளாளர் தமிழரசன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஒன்றிய அவைத்தலைவர் ஜி.பன்னீர்செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கவி.கார்த்திகன், சுப.சிற்றரசன், சந்திரவடிவம்ராஜா, மோகன், கே. எஸ்.கண்ணன், கலையரசன், செல்வமணி மற்றும் பலர் பங்கேற்றனர்.

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் - துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# திருவொற்றியூர் கிழக்கில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் கோவி. செழியன் சிறப்புரை! தலைமை: மாதவரம் எஸ்.சுதர்சனம்! கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, டிச.15-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பெரியார் நகர் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் ஏழை எளியோரின் எழுச்சி நாளாக கொண்டாடும் வகையில், 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், திருவொற்றியூர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி, பகுதி துணை செயலாளர் எம்.வீ.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், 8வது வார்டு வட்ட கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன், 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.சி.வி.ராஜகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. விழாவிற்கு தலைமை வகித்தார்.

விழாவில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இளம் பேச்சாளர் தம்பி மோகன்நிதி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் மற்றும் மாநில நிர்வாகிகள், வீ.கண்ணதாசன்,

மாநில சட்டத்துறை இணை செயலாளர், ஜி.சந்திரபோஸ், மாநில சட்டத் துறை துணை செயலாளர், வீ.கவி.கணேசன் எம்.சி., தலைமை கழக வழக்கறிஞர், மாமன்ற உறுப்பினர், ஆர்.பத்மநாபன், மாநில மீனவர் அணி துணை செயலாளர், திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள்தாசன், ஏ.வீ. ஆறுமுகம் மத்திய பகுதி செயலாளர், 2வது மண்டல குழு தலைவர், எஸ்.நந்தகோபால், 3வது மண்டல குழு தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மிசா.பா.மதிவாணன், வி. ராமநாதன், மாவட்ட துணை செயலாளர் மு. ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன், பி.அறிவழகி பாலகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள், டி.ஏ.ராஜ், இரா. முருகேசன், சாந்தி பக்தன், என்.பரந்தாமன்,ஜெ.ஜெய் மதன், மற்றும் பகுதி, பேரூர், ஒன்றிய கழக செயலாளர்கள் ஜி.துக்காராம், புழல் எம்.நாராயணன், ஜி. தயாளன், மீ.வே.கர்ணாகரன், ஜி.ராஜேந்திரன், சி. அற்புதராஜ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட பிரதிநிதி ஒய். நந்திவர்மண் நன்றி கூறினார்.